# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**பி.சா.2-)**

**அசல் வழக்கு எண். 4/2018**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அவிநாசியப்பன் | தாலூக்கா | கருமத்தம்பட்டி |
| தந்தை பெயர் | நாச்சிமுத்துகவுண்டர் | கிராமம் | எலச்சிபாளையம் |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 21.11.2025 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் நபர் ஆவேன். எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பில் ஏற்றுகொள்ள வேண்டுகிறேன்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். கதவு எண்.66, எலச்சிபாளையத்தில் குடியிருப்பதற்கு எனது ஆதார் அட்டையோ அல்லது குடும்ப அட்டையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க வேண்டி அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி சக்திவேல் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார் அதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்று தெரியாது.

2. வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்றால் காட்டு பிரச்சனை என்று சொன்னார்கள். வழக்கின் சர்வே எண் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் கோவிந்தராஜ் வகையறா வட்டி தொழில்செய்வதாக சொல்லியுள்ளேன் என்றும், அவர்கள் எங்கு வைத்து வட்டி தொழில் செய்கிறார்கள் என்றால் வட்டிக்கு பணம் கொடுக்கிறார்கள். நான் வாதிகளின் PROMISORY NOTE அல்லது பத்திர தாள்களில் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக வாதிகள் வட்டி தொழில் செய்வதாக சொல்கிறேன் என்றும், வாதிகள் வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் ஒரு முறை சூலூர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளேன் என்று கூறிக்கொண்டு பல நபர்களுடன் தாவா சொத்திற்கு வந்து பார்வையிட்டு சென்றார்கள் என்பது எனக்கு நன்றாக தெரியும் என சொல்லியுள்ளேன் என்றும், அது எப்போது எந்த தேதி என்று தெரியுமா என்றால் தேதி தெரியாது 7-8 வருடங்களுக்கு முன்பு அவ்வாறு நடந்தது. அது சம்பந்தமாக சக்திவேல் வகையறா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. நான் சொல்வது சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், சக்திவேல் வகையறா கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனது பிரமாண வாக்கமூலத்தில் ராமசாமி பெயரில் உள்ள சொத்தை அவர் திருமணம் ஆகாமல்இறந்து விட்டதால் அவரது தாயார் ராமாத்தாளை கூட்டி சென்று சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தேவையில்லாத பத்திரங்களை உருவாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றும், யார் ராமாத்தாளை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் பெயர் தெரியாது. எந்த தேதி, வருடம் அழைத்து சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு அழைத்து சென்று என்ன பத்திரம் எழுதி வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது,

காட்டை எழுதி வாங்கியதாக சொன்னார்கள்.

5. ராமாத்தாளிடம் இருந்து காட்டை எழுதி வாங்கிய விவரம் தெரியும் என்றால் அது உண்மையா, பொய்யா என்று தெரியாது. கிரயத்தை ரத்து செய்ய வேண்டி சக்திவேல் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. வாதிகளுக்கு சொத்தின் விவரம் தெரியாது என சொல்லியுள்ளேன் என்றும், எனக்கு சொத்தின் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் என்ன பொய்யான ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. எனக்கு வழக்கு பற்றிய சங்கதிகள் தெரியாது என்றும் வழக்கின் பரிகாரம் தெரியாது என்றும், வழக்கின் பிரச்சனைகள் தெரியாமல் சக்திவேல் கேட்டுகொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

குறுக்குவிசாரணை வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur